2010 ஏப்ரல் 30]

பகுதியில் ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒன்று நடைபெற்று வருகிறது. தற்சமயம் பெரம்பலூர், அரியலூர் என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில், பெரம்பலூர் மாவட்டத்திற்கென ஒரு தனி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் இல்லை. எனவே, பெரம்பலூர் மாவட்டத்திற்கென ஒரு தனி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சி. கோவிந்தசாமி அவர்களுக்கு அளித்த அதே பதிலைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார் அவர்களுக்கும் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. விடியல் எஸ். சேகர் மற்றும் திரு. ம. குணசேகரன் ஆகிய மூன்று பேரும் ஒரே கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

வனம்

***45898—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**
திரு. விடியல் எஸ். சேகர்:
திரு. ம. குணசேகரன்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூமி வெப்பமடைவதைத் தடுக்க, வனப் பகுதிகளை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வனப் பகுதிகளில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், நிலை–1 மற்றும் 2; நகர்ப்புற வனவியல் திட்டம்; தனியார் நிலங்களில் மரம் நடும் திட்டம்; தமிழகக் கடற்கரை மாவட்டங்களில் சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் அரசு நிலங்களில் தொடர் தடுப்புத் தோட்டங்களும் மற்றும் அலையாத்தி மரத் தோட்டங்களும்; தனியார் நிலங்களில் கடலோரத் தடுப்புத் தோட்டங்களும் உருவாக்கும் திட்டம் மற்றும் ஆற்றுப் படுகைப் பகுதிகளில் தேக்கு மரங்கள் நடும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் மரங்களை வளர்த்து, வனம் மற்றும் பசுமைப் போர்வையை அதிகப்படுத்தி, பூமி வெப்பமடைவதைத் தடுக்க அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

முற்பகல் *10–15*

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவி வெப்பமடைவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையிலே தமிழக எரிசக்தி மேம்பாட்டு முகமை, 'சூடாகும் பூமி' என்ற ஒரு சிறிய கையேட்டினை வெளியிட்டு, அந்தக் கையேட்டினுடைய இறுதிப் பக்கத்திலே, ஜேம்ஸ் லவ்லாக் என்ற அறிஞன், 'பூமிப் பந்து தன்னைத்தானே சரிப்படுத்திக்கொள்கின்ற திறமை படைத்த உயிரி' என்று சொல்லியிருக்கிறார். "மாற்றம் ஒன்றுதான் மாறாது" என்ற உலக இயல்புக்கு இணங்க, அவரே தன்னுடைய 'GAIA' என்ற அந்த theory-யை மாற்றிக்கொண்டு, "பூமி தன்னைச் சீர்படுத்திக்கொள்ளும் எல்லையைத் தாண்டிவிட்டது" என்று எச்சரித்ததற்கு இணங்க, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கிற அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததற்குப் பாராட்டுகளும், வாழ்த்துகளும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வள்ளுவப் பெருந்தகையானின்,

> "நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
> வான்இன்று அமையாது ஒழுக்கு"

என்ற எச்சரிக்கைக்கு இணங்க, மழை நீர் சேமிப்பைக் குறித்து நமது அரசு எடுத்துள்ள நடவடிக்கையை இந்த அவைக்கு

2010 ஏப்ரல் 30]

அறிவித்தால், எதிர்வரும் மழைக் காலத்தில் மக்களுக்கு மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதாக அமையும் என்று தெரிவித்து, அதனைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வலியுறுத்தி, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும். சுருக்கமாகக் கேளுங்கள்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: அதற்கு அமைச்சர் ஆவன செய்வார்களா என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களின் முக்கியத்துவத்தை நாட்டுக்கு உணர்த்துவதற்காக மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், 'மரங்களை மக்கள் வளர்த்தால், மரங்கள் மக்களை வளர்க்கும்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் குறிப்பிட்டுச் சொல்லி, மரங்களினுடைய முக்கியத்துவத்தை நாட்டு மக்களுக்கு விளக்கியிருக்கிறார்கள். எனவேதான், தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில், காடுகளெல்லாம் தரம் குன்றியிருந்து, பல இடங்களிலே, பல்வேறு சூழ்நிலைகளில் இருந்தவற்றிற்கு மீண்டும் புத்துயிர் ஊட்ட வேண்டுமென்பதற்காக, 'தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்' என்ற திட்டத்தை உருவாக்கி, அதன்மூலம் கிட்டத்தட்ட 4 இலட்சத்து 80 ஆயிரம் எக்டர் நிலங்களைச் சீர்படுத்துவதற்காக ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடம் ரூபாய் 688 கோடி செலவிலே அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதைப்போல், நான் என்னுடைய முதல் பதிலிலே குறிப்பிட்டதைப்போலப் பல்வேறு திட்டங்கள். தேசிய காடு வளர்ப்புத் திட்டம். அதைப்போல, தனியார் நிலங்களிலே இந்தியாவிலேயே எங்குமில்லாமல் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் தனியார் நிலங்களிலும் மரம் வளர்த்து— ஏனென்றால் பசுமைப் போர்வையை 33 விழுக்காடு அதிகரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற நேரத்தில், நம்மிடம் 17.59 விழுக்காடுதான் இருக்கிறது. மரப் பரப்பையும் சேர்த்தால்கூட

அது 21.76 விழுக்காடுதான் இருக்கிறது. ஆனால், நாம் 33 சதவிகிதத்தை அடைய வேண்டுமென்பதற்காகத்தான் அவர்கள் இந்தத் திட்டத்தையெல்லாம் உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்கள். இன்னும் பல்வேறு திட்டங்களிலே இதைப்போல் தனியார் நிலங்களில் மரம் நடுதல், நாளைய மரத் தேவைகளையும் மனதிலே கொண்டு ஆற்றுப் படுகைப் பகுதிகளிலே அந்த மரங்களை, தேக்கு மரங்களை நட்டு, நாளைய தேவைகளையும், இன்றைய பசுமைப் போர்வையையும் அதிகரிக்க இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. நெடுஞ்செழியன், உங்களுக்கு அடுத்து வாய்ப்புக் கொடுக்கிறேன். இப்பொழுது supplementary வாய்ப்பை அவர்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வெப்பமயமாதல் என்பது சர்வதேசப் பிரச்சினையாக, சர்வதேச நாடுகளெல்லாம் பெரிய ஆய்வை நடத்திக் கொண்டிருக்கின்றன. அதிலே இந்தியாவினுடைய நிலைமை என்ன? தமிழகத்திலே புவி வெப்பமாவதைத் தடுப்பதில் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்ற செய்தியை அறிவாரா என்பதைக் கேட்டு, தீப்பிடிக்கிறது என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. தீப்பிடிப்பதைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், வழக்குகளெல்லாம் பதிவு செய்வதைத் தடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிவதோடு, பள்ளி, கல்லூரி மாணவர்கள் மத்தியிலே இளைய சமுதாயத்தினரிடையே மரம் வளர்ப்பதற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, பள்ளி, கல்லூரிகளிலே மரம் வளர்ப்பு இயக்கத்தைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வெப்பமயமாவது உலகளவிலே ஒரு பிரச்சினை என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இந்தியாவைப் பொறுத்த அளவில் நாம் பயன்படுத்துகின்ற அந்த அளவு, ஒரு நிலக்கரியை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமேயானால், ஒரு தனி

2010 ஏப்ரல் 30]

மனிதனுக்கு 370 கிலோ அளவிற்கு அனல் மின்சாரம் தேவை; தொழிற்சாலைகள் பயன்பாட்டிற்கு 370 கிலோ தேவை. ஆனால், முன்னேறிய நாடான அமெரிக்கா போன்ற நாடுகளிலே 6 ஆயிரம் கிலோவுக்குமேல் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். இருந்தாலும்கூட, நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், புவி வெப்பமயமாவது என்பது எல்லோருக்கும் பொது என்கின்ற காரணத்தால், அதை இந்தியாவிலே மிக அக்கறையோடு செயல்படுத்துவேன் என்று அண்மையிலே டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் நடந்த அந்த மாநாட்டிலே அவர்கள் தெரிவித்து வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே, மரங்களை அதிகமாக நடுவதற்கு இயற்கை வளத்தை அதிகமாக உருவாக்க வேண்டுமென்று நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அரசு, ஒரு திட்டத்தைத் தயாரித்து, ரூபாய் 635.62 கோடிக்கு அந்தத் திட்ட மதிப்பீடு மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் அங்கே அனுமதி பெறுமேயானால், கிட்டத்தட்ட 10 கோடி மரக் கன்றுகள் ரூபாய் 144.21 கோடி செலவிலே நடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

அதைப்போல தீத்தடுப்பு என்று சொல்லுவது, கோடைக் காலங்களில் மாடு மேய்க்கச் செல்பவர்கள் பலர், அந்தத் தீயை மூட்டிவிடுகிறார்கள். அல்லது பார்வையாளர்களாக சுற்றுலா ஆர்வலர்கள் செல்லுகின்ற நேரத்திலே, தாங்கள் பயன்படுத்துகின்ற சிகரெட் துண்டுகளை எல்லாம் தூக்கி எறிகின்ற காரணத்தினால், அதிலே மிகவும் காய்ந்த நிலையில் இருக்கின்ற அந்தப் புல் எல்லாம் தீப்பிடித்து விடுகிறது. அதைத் தடுப்பதற்காக தீத்தடுப்புக் கோட்டகம் என்ற கோடுகளை உருவாக்கி, அந்தக் கோடுகளுக்குப்பிறகு எந்த அளவிற்கு அந்தத் தீ பரவினாலும்கூட பரவ முடியாத அளவிற்கு செயல்பட்டு வருகிறது. வேட்டைத் தடுப்புக் காவலர்களைப் பயன்படுத்தி அந்தத் தீத்தடுப்பையும் நாங்கள் கட்டுப்படுத்தி வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

[2010 ஏப்ரல் 30

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சூழலின் மாற்றங்கள் காரணமாக வெப்ப மண்டலம் அதிகரித்து, இன்றைக்கு பூமி வெப்பமடையும் அளவிற்கு ஓசோன் படலம் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பூமி இன்றைக்கு வெப்பம் அடைந்து, பல இன்னல்களையும், பல இடையூறுகளையும் ஏற்படுத்தி வருகின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தடுப்பதற்கு, நம்முடைய இந்தியாவாக இருந்தாலும் சரி, தமிழகமாக இருந்தாலும் சரி, அதிகமான மரக் கன்றுகளை வளர்த்து, அதாவது அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், சாலைகள், ஊருணிகள், கண்மாய்கள் போன்ற இடங்களில் அதிகமான மரங்களை வளர்த்து, அந்த மரங்களின் மூலமாக இந்த வெப்பத்தைத் தணிக்கக்கூடிய அளவிற்கு ஒரு நடவடிக்கை எடுக்கலாம்.

அதைப்போல, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் 'மழை நீர் சேகரிப்புத் திட்டம்' என்ற உன்னதமான திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தை நீங்கள் தீவிரமாகச் செயல்படுத்துகின்ற நேரத்தில் நிலத்தடி நீர் அதிகமாக உருவாகி, பூமி வெப்பம் அடைவதைத் தடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும். அதைப்போல, தனியார்கள் தங்களுடைய நிலங்களிலே மரங்களை வளர்த்து, அதன்மூலம் வெப்பத்தைத் தணிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துத் திட்டங்களையும் தலைவர் கலைஞருடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் முதலிலே குறிப்பிட்டேன். தனியார் காடுகளில் மரம் வளர்க்கும் திட்டத்தை மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தத் தமிழகத்திலே அறிமுகப்படுத்தினார்கள். மைய அரசுக்குச் சென்று எங்களுடைய அதிகாரிகள் அங்கே விவாதிக்கும்பொழுது, உண்மையிலேயே அந்தத் திட்டத்தைப் பற்றி அவர்கள் தங்களுடைய மிகுதியான ஆச்சரியத்தைத் தெரிவித்து, இதை இந்தியா முழுவதும் கடைப்பிடிக்க வேண்டும் என்று

2010 ஏப்ரல் 30]

சொல்லியிருக்கிறார்கள். 2007–2008, 2008–2009, 2009–2010, இந்த மூன்று ஆண்டுகளிலே மட்டும் கிட்டத்தட்ட 32,554 எக்டர் நிலங்களிலே, அதாவது 80,410 ஏக்கர் தனியார் நிலங்களிலே மரம் வளர்த்து, கிட்டத்தட்ட 56,132 விவசாயிகள் பயன்பெற்று, தலைவர் கலைஞர் அவர்களை, அவர்களெல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். கட்டாந்தரையாக இருந்த எங்களது நிலங்களில் அவர்களே, அரசே நட்டுக் கொடுத்து எங்களது பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று தலைவர் அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

130—

துறைமுகம்

***607—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தோப்புத்துறையில் உள்ள துறைமுகம் இயங்காது நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) சீரமைத்து மீண்டும் கப்பல் போக்குவரத்து துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதி, தோப்புத்துறை துறைமுகத்தில் கப்பல்கள் நிறுத்துவதற்குத் தேவையான ஆழம் இல்லாததால் தற்போது துறைமுகம் இயங்காமல் உள்ளதை அரசு அறியும்.